தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 22.08.2013

### மஞ்சளில் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டைப் போக்க...



வணிக ரீதியான பயிரில் மஞ்சள் முக்கியப் பங்கு வகிக்கிறது. குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் சுமார் 10,000 ஹெக்டேர் நிலப் பரப்பில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது.

மஞ்சள் பயிரில் ஏற்படும் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டால் மஞ்சள் மகசூல் அதிகளவில் பாதிக்கப்படுகிறது. தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் ம.சங்கீதா, மஞ்சள் பயிரில் ஏற்பட்டுள்ள நுண்ணூட்டச் சத்து குறைபாடு, அவற்றை நிவர்த்தி செய்வது குறித்து கூறியது:

ஓர் ஏக்கரில் சராசரியாக 2 முதல் 2.5 டன் உலர் மஞ்சள் கிழங்கு மகசூல் கிடைக்கும். சரியான உர மேலாண்மை, பயிர் வளர்ச்சிப் பருவத்தில் சரியான நீர்ப்பாசன முறைகளைப் பின்பற்றாததால் மஞ்சள் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுகிறது.

பொதுவாக மஞ்சள் பயிரானது மேலோட்டமான வேர் அமைப்பு கொண்டிருந்தாலும், நீண்ட காலப் பயிராக சாகுபடி செய்வதாலும், மிகக் குறைந்த இடத்தில் அதிக அளவு உலர் பொருளை உற்பத்தி செய்யக்கூடிய பயிராக இருப்பதாலும் மண்ணிலிருந்து அதிக சத்துக்களை எடுத்துக் கொள்கிறது.

மேலும், மற்ற பயிர்களைக் காட்டிலும் மஞ்சள் பயிருக்கு உரத் தேவை அதிகம். எந்தவொரு பயிரும் நன்றாக வளர்ந்து அதிக மகசூல் கிடைக்க பல்வேறு வளர்ச்சி நிலைகளில் மொத்தம் 16 வகையான ஊட்டச் சத்துக்கள் தேவைப்படுகின்றன.

பயிரின் வளர்ச்சிக்கு அதிகளவில் தேவைப்படும் பேரூட்டச் சத்துக்களான கார்பன், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன், தழை, மணி, சாம்பல், சுண்ணாம்பு, மக்னீசியம், கந்தகச் சத்து மற்றும் மிகக் குறைந்த அளவில் தேவைப்படுக் கூடிய நுண்ணூட்டச் சத்துக்களான இரும்பு, துத்தநாகம், தாமிரம், போரான், குளோரின் ஆகியவை தேவை.

தற்போதைய காலகட்டத்தில் அனைத்து வகையான பயிர்களிலும் நுண்ணூட்டச் சத்து குறைபாடு அதிக அளவில் காணப்படுகின்றன. இதற்கு மிக முக்கியக் காரணங்கள் நவீன விவசாய முறையில் பின்பற்றக் கூடிய தீவிர சாகுபடி முறை, அதிக விளைச்சல் தரக்கூடிய வீரிய ஒட்டு ரகங்களைப் பயன்படுத்துதல், போதுமான அளவு இயற்கை உரம் அல்லது தொழுவுரம் இடாமை, தொடர்ந்து பேரூட்டங்களை மட்டுமே தரக்கூடிய ரசாயன உரங்களைப் பயன்படுத்துதல், பயிரின் வளர்ச்சி பருவம், காலநிலை மாற்றம் ஆகியவை ஆகும்.

இவற்றால் மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துக்கள் கிடைக்காததால் பயிரில் ஊட்டச்சத்துக் குறைபாட்டுக்கான அறிகுறிகள் அதிகளவில் தோன்றுகின்றன. தற்போது தருமபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் பயிரில் பரவலாக இரும்பு, துத்தநாக நுண்ணூட்டச் சத்துக்களின் குறைபாட்டுக்கான அறிகுறிகள் அதிகளவில் தென்படுகின்றன. எனவே, விவசாயிகள் இந்த நுண்ணூட்டச் சத்துக்களின் குறைபாடு அறிகுறிகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதன் மூலம் அதிக மகசூலைப் பெறலாம்.

துத்தநாக சத்து: துத்தநாக சத்துக் குறைபாடு மண்ணின் அமில கார நிலை 7-க்கு மேல் உள்ள நிலங்களிலும் அதாவது களர் நிலங்களிலும், களிமண் மற்றும் சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ள நிலங்களிலும் அதிகமாகக் காணப்படும்.

மேலும், இந்தச் சத்து குறைபாடானது தண்ணீர் பற்றாக்குறை அதிகமுள்ள காலங்களில் பரவலாகக் காணப்படும். இதனால், பயிர்கள் வளர்ச்சி குன்றி, குட்டையாகக் காணப்படும். இலைகள் அளவில் சிறியதாகவும், கணுவிடைப் பகுதியின் நீளம் குறுகியும் காணப்படும். மேலும், இளம் இலைகள் மஞ்சள் நிறமாக தோற்றமளிக்கும். இலைகள் மேல் நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ வளைந்து காணப்படும்.

நிவர்த்தி முறை: இத்தகைய அறிகுறிகள் தெரிந்தவுடன் 0.5 சத துத்தநாக சல்பேட் கரைசலை அதாவது 5 கிராம் துத்தநாக சல்பேட்டை ஒரு லிட்டர் நீரில் கரைத்து மாலை வேளையில், 10 நாள்கள் இடைவெளியில், அறிகுறிகள் மறையும் வரை தொடர்ந்து இலைகள் மீது தெளிக்க வேண்டும்.

மேலும், அடுத்த சாகுபடி செய்யும் பயிர்களில் துத்தநாக சத்து குறைபாடு வராமல் தடுக்க ஹெக்டேருக்கு 15 கிலோ துத்தநாக சல்பேட் உரத்தை அடியுரமாக இட வேண்டும். மேலும், இதை ஊட்டமேற்றிய தொழுவுரமாக 1:1 என்ற விகிதத்தில் கலந்து மிதமான ஈரப்பதத்தில் 20-25 நாள்கள் வைத்திருந்து பயிருக்கு இடுவதன் மூலம் உரப் பயன்பாட்டை அதிகரிக்கலாம்.

இரும்புச் சத்து: இரும்புச் சத்து குறைபாடானது மணல் பாங்கான நிலங்கள், சுண்ணாம்புச் சத்து அதிகமுள்ள நிலங்கள், களர் உவர் நிலங்களில் அதிகமாகக் காணப்படும். இந்த சத்துக் குறைபாட்டால் புதியதாக வெளிவரும் துளிர்கள் வெளுத்து மஞ்சள் அல்லது வெள்ளை நிறமாக மாறிவிடும். இலைகளின் நரம்புகளுக்கு இடைப்பட்ட பகுதிகள் வெளிறியும், இலைகள் நரம்புகள் பச்சை நிறமாகவும் காணப்படும். இந்த குறைபாடு அதிகமுள்ள நிலங்களில் மஞ்சள் பயிரானது வெள்ளை நிறத்தில் காட்சியளிக்கும்.

நிவர்த்தி முறை: இரும்புச் சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்ய 0.5 சத இரும்பு சல்பேட் கரைசலை அதாவது, 5 கிராம் இரும்பு சல்பேட்டை ஒரு லிட்டர் நீரில்

கரைத்து மாலை நேரங்களில் இலைகளின் மீது நன்றாகபடும்படி தெளிக்க வேண்டும். இவ்வாறு 10 நாள்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். மேலும், அடுத்தமுறை பயிர் செய்யும்போது இத்தகைய குறைபாடு தோன்றுவதைத் தவிர்க்க ஹெக்டேருக்கு 30 கிலோ இரும்பு சல்பேட் உரத்தை அடியுரமாக இடவேண்டும் என்றார் அவர்.

மேலும் விவரங்களுக்கு நா.தமிழ்செல்வன், பேராசிரியர் மற்றும் தலைவர் வேளாண்மை அறிவியல் நிலையம், பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் என்ற முகவரியிலோ அல்லது 04342-245860 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

நுண்ணூட்டச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்ட மஞ்சள் பயிர்கள்.

**சினைப் பருவத்தில் பசுக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளும், தீர்வுகளும்...**



சினைப் பருவத்தில் பசுக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள், அவற்றைத் தவிர்க்க மேற்கொள்ள வேண்டிய பராமரிப்பு முறைகள் குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி நிர்வாகம் பல்வேறு வழிமுறைகளை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கல்லூரியின் விரிவாக்கத் துறை பேராசிரியர்கள் என்.நர்மதா, வே.உமா, மொ.சக்திவேல் ஆகியோர் கூறியது:

கறவை மாடு வளர்ப்பில் சினைப் பசுக்களுக்கு உரிய பராமரிப்பு செய்யாவிட்டால், கன்று வீசுதல், குறைமாதக் கன்றை ஈனுதல், பால் உற்பத்திக் குறைதல் போன்ற விளைவுகள் ஏற்பட்டு நஷ்டத்தை உருவாக்கும்.

இந்தப் பாதிப்புகளைத் தடுக்க சினை மாடுகளை அடிக்கடி அடித்துத் துன்புறுத்துதல், மிரட்டுதல், அதிக தொலைவு நடக்க வைத்தல் கூடாது. கருவிலுள்ள இளங்கன்று வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களை கொடுக்க வேண்டிய தாலும், பால் உற்பத்திக்குத் தேவையானச் சத்துக்களை உடம்பில் சேமிக்க வேண்டியதா லும் சினை மாட்டுக்கு சத்தான தீவனம் கொடுக்க வேண்டும்.

ஏழாம் மாதம் சினை முடிந்ததும் சினைப் பசுவைத் தனிக் கொட்டகையில் வைத்து பராமரிப்பதுடன், 45 நாள் முதல் 60 நாள் வரை பால் வற்றச் செய்ய வேண்டும். 45 நாள்களுக்குக் குறைந்த வற்றுக்காலம் உள்ள பசுக்களுக்கு மடி சரியான அளவு சுருங்காமலும், 60 நாள்களுக்கு மேல் வற்றுக் காலமுள்ள பசுக்களில் அதிக நாள்கள் பால் கறக்காமல் இருப்பதாலும் அடுத்த ஈற்றில் குறைவான அளவே பால் கிடைக்கும்.

அதன்படி, பால் வற்றுக் காலத்தில் தீவன அளவில் 50 சதம் குறைத்து ஒரேடியாக பாலை வற்றச் செய்ய வேண்டும். பகுதியளவு பாலைக் கறப்பதும், ஒருநாள் விட்டு ஒரு நாள் பாலைக் கறப்பதும் பால் வற்றக் கூடுதல் நாள்களாவதுடன், மடி நோயையும் உண்டாக்கக் கூடும்.

பால் வற்றச் செய்வதால் வளரும் கருவுக்கு தகுந்த ஊட்டச்சத்துகள் கிடைப்பதுடன், கறவை மாடுகள் நல்ல உடல் நிலையை அடையும். மடி சரியான விகிதத்தில் சுருங்கி அடுத்த கறவையில் நல்ல செயல் திறன் பெறும். தொற்று நோய்கள், வளர்சிதை மாற்ற நோய்கள், உணவு மண்டல நோய்கள் ஏற்படாமல் தடுக்கும்.

தீவன மேலாண்மை: ஏழாவது மாதம் முதல் கன்றின் வளர்ச்சி துரிதமடைவதால் தீவனத் தேவை அதிகரிக்கும். எனவே, சினை மாடுகளுக்கு தினமும் பசுந்தீவனம் 15 முதல் 25 கிலோவும், உலர் தீவனம் 6 முதல் 8 கிலோ வரையும், அத்துடன் தாது உப்பு கலந்த 2 கிலோ அடர் தீவனமும் 3 மாதங்கள் கட்டாயம் அளிக்க வேண்டும். கன்று ஈனுவதற்கு மூன்று நாள்கள் முன்பு மலச்சிக்கலைத் தவிர்க்க தவிடு சற்று அதிகமாக கொடுக்கலாம்.

பசுந்தீவனத்தின் மூலம் கிடைக்கும் வைட்டமின் ஏ சத்து பசுக்களின் கருப்பை, பிறப்புறுப்புக் கூறுகளின் திசு வளர்ச்சிக்கும், நஞ்சுக் கொடியின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் பெறுகிறது. தவிர, 450 கிராம் உப்பு மற்றும் ஒரு தேக்கரண்டி

இஞ்சித் தூள் ஆகியவற்றை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து கொடுத்தால் கன்று ஈனும் போது எளிதாக இருக்கும்.

ஆரோக்கியமான கன்றை ஈனவும், மாடுகள் கறவையில் இருக்கும் போது ஆரோக்கியமாகவும், உச்சக்கட்ட பால் உற்பத்தி காலத்தில் பால் அளவும் அதிகரிக்கவும், சினைப் பிடிக்கும் திறன் அதிகரிக்கவும் சினைப் பருவத்தில் கடைசி 30 நாள்களுக்கும், கன்று ஈன்ற பிறகு 70 நாள்களுக்கும் தீவன பராமரிப்புச் செய்ய வேண்டும்.

கொட்டில் அமைப்பு: சினை மாடுகளுக்கு இடவசதியும், தரை அமைப்பும் சிறப்பாகச் செய்ய வேண்டும். ஏழாவது மாத சினைக் காலம் முதல் கன்று ஈனும் வரை தனது உடலமைப்பை மெல்ல மாற்றத் துவங்கும். இந்தக் காலகட்டத்தில் மாடுகள் வழுக்கி விழுந்தாலோ அல்லது பலத்த அடிபட்டாலோ கருப்பைச் சுழற்சி ஏற்படவும், சில சமயங்களில் கன்று உயிரிழக்கவும் வாய்ப்புள்ளது.

எனவே, கொட்டில் தரையை எப்போதும் வழுக்காமல் இருக்கவும், பாசி, சாணப் பற்று இல்லாமல் சுத்தமாக வைப்பதும் அவசியமாகும் என்றனர் அவர்கள்.

**விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

நாகர்கோவிலில் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் குமரி மாவட்டக் குழு சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு துணைத் தலைவர் சாகுல்அமீது தலைமை வகித்தார்.

மாவட்ட துணைத் தலைவர் சிவானந்தம், பொருளாளர் தங்கமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் தினக்கூலியை ரூ. 148 ஆக உயர்த்தி வழங்க வேண்டும், வேலைப் பளுவை குறைக்க வேண்டும், வேலைக்கு தேவையான உபகரணங்களை ஊராட்சி நிர்வாகம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கோஷமிட்டனர்.

**வெங்காயம் விலை மீண்டும் உயர்ந்தது: இறக்குமதி செய்ய மத்திய அரசு தீவிரம்**



நாடு முழுவதும் வெங்காயத்தின் விலை மீண்டும் கிலோ ரூ.80 என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. இதனால் கவலையடைந்துள்ள மத்திய அரசு, வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.

நாட்டிலேயே வெங்காயத்தை அதிக அளவில் உற்பத்தி செய்யும் மகாராஷ்டிர மாநிலத்தில் இந்த ஆண்டு வறட்சி காரணமாக உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் கடந்த 15 நாள்களாக வெங்காயத்தின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. மேலும், ராஜஸ்தான், ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பெய்த மழை காரணமாக வெங்காய வரத்து குறைவாகவே உள்ளது. இதுவும் விலை உயர்வுக்குக் காரணமாகி விட்டது.

வடமாநிலங்களைப் பொறுத்த வரை மக்களின் அன்றாட உணவு வகைகளில் வெங்காயம் மிகவும் இன்றியமையாததாகும். கடந்த முறை வெங்காய விலை உயர்வு காரணமாக தில்லியில் நடைபெற்ற பேரவைத் தேர்தலில் பாஜக ஆட்சியை இழந்தது. இப்போது, உயர்ந்து வரும் வெங்காய விலை காரணமாக மத்திய அரசு கவலையடைந்துள்ளது.

மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் நவம்பர் மாதம் பேரவைத் தேர்தல் நடக்க உள்ள நிலையில், இந்தச் சூழ்நிலையை பாஜக பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று காங்கிரஸ் கருதுகிறது. வெங்காயத்தை இறக்குமதி செய்யுமாறு நாஃபெட் எனப்படும் தேசிய வேளாண் கூட்டுறவு அமைப்புக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

மேலும், வெங்காய ஏற்றுமதியைக் குறைக்கும் நோக்கில் டன்னுக்கு 650 டாலர் என்ற குறைந்தபட்ச ஏற்றுமதி விலையையும் நிர்ணயித்துள்ளது.

மத்திய அரசின் உத்தரவைத் தொடர்ந்து, பாகிஸ்தான், ஈரான், சீனா, எகிப்து ஆகிய நாடுகளில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று நாஃபெட் டெண்டர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

வெங்காயம் வாங்க ராஜஸ்தான் நிதி ஒதுக்கீடு:வெங்காயத்தை மொத்த விலைக்கு வாங்கி, நுகர்வோருக்கு மலிவு விலையில் வழங்குவதற்காக ராஜஸ்தான் அரசு தனது கூட்டுறவுத்துறைக்கு சுழல் நிதியாக ரூ.4 கோடியை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு, சந்தையில் இருந்து மொத்த விலைக்கு வெங்காயத்தை வாங்க உள்ள கூட்டுறவுத்துறை அதை மக்களுக்கு கிலோ ரூ. 30 முதல் ரூ. 35 வரை விற்பனை செய்யும் என்று இத்துறையின் முதன்மைச் செயலாளர் வி.சி.சர்மா தெரிவித்தார்.

**வேளாண் விற்பனை மேம்பட 350 குளிர்சாதன வாகனங்கள் வாங்க அரசுத் திட்டம்: வேளாண் பல்கலை. துணைவேந்தர் தகவல்**

தமிழகத்தில் வேளாண் விற்பனையை மேம்படுத்தும் நோக்கில் 350 குளிர்சாதன வசதியுள்ள வாகனங்களை வாங்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளதாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்துள்ளார்.
÷"சந்தை அடிப்படையிலான வேளாண்மை மற்றும் வேளாண்மையில் தொழில் முனைப்பு' என்ற தலைப்பில் வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சி தொடக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது.
÷தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் இணைந்து இந்தப் பயிற்சி முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தன. இதில் வேளாண் வணிகத் துறையில் பணிபுரியும் சுமார் 190 விரிவாக்க அலுவலர்களுக்கு ஐந்து பிரிவுகளாகப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
÷விழாவில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு.ராமசாமி பேசியது:
÷வேளாண் விளைபொருள்களுக்கு தக்க விலை நிர்ணயம் செய்தால் வேளாண்

தொழில் மேலும் வளர வாய்ப்புள்ளது. தற்சமயம் கிராமங்களில் 50 வயதிற்கு மேற்பட்டோர் அதிகம் உள்ளனர். கிராம வாழ்க்கை முறையும் மாறிக்கொண்டு வருகிறது.

÷வேளாண் விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற தகவல்கள் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கிடைத்தால் வரும் காலங்களில் விவசாயத்தை நாடிவரும் இளைஞர்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

÷தற்போதைய தமிழக அரசின் சீரிய திட்டங்களால் கிராமங்களில் ஆடுகள் மற்றும் மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து உயிரோட்டம் அதிகரித்து காணப்படுகிறது. விவசாயிகள் தங்களது பயிர் மற்றும் உயிரினங்களுக்கு காப்பீடு செய்வது உகந்தது.

÷வேளாண் விற்பனைத் துறை விரிவாக்க அதிகாரிகள் விவசாயிகளோடு ஒத்துழைத்து சந்தை விரிவாக்கப் பணிகளை செய்தால் விவசாயிகளின் வருமானம் பெருகி வெற்றி காண்பது நிச்சயம். வரும் காலங்களில் தமிழகத்தில் வேளாண் விற்பனை செம்மையாக நடைபெற 350 குளிர்சாதன வசதியுள்ள வாகனங்களை வாங்க தமிழக அரசால் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

÷இவ்விழாவில், சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத் தலைவர் ஆ.ரவிசந்திரன் பேசியது:

÷உழவர்களை விவசாயத் தொழிலில் ஈடுபடுத்த வேளாண் விரிவாக்க அலுவலர்கள் ஊக்குவிக்க வேண்டும். விரிவாக்கப் பணிகள் மூலம் விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க சேவை செய்ய வேண்டும்.

÷நாளைய சமுதாயமும் விவசாயத்தில் ஈடுபடத் தூண்டும் வகையில் இன்றைய விவசாயிகளை வழிநடத்திச் செல்ல இந்தப் பயிற்சி உபயோகமாக அமைய வேண்டும் என்றார்.

÷இதில், தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரிய உதவிச் செயலாளர் ராமசாமி, வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு மையத்தின் இயக்குநர் ஆ.சின்னதுரை, வேளாண் பொருளியல் துறைத் தலைவர் சு.பாலசுப்பிரமணியன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## இன்று மழை பெய்ய வாய்ப்பு

சென்னையில் இன்று மாலை நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் எனவும் வானிலை மையம் அறிவித்துள்ளது. சென்னை பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழை பெய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 96% இழப்பீட்டுத் தொகை: தமிழக அரசு

தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளில் 96 சதவீதம் பேருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்களுடன் வருவாய்த் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் சென்னையில் புதன்கிழமை ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் பேசியது:

கல்வி உதவித் தொகை, விபத்து நிவாரணம் உள்பட இதுவரை 19 லட்சத்து 94 ஆயிரம் பேருக்கு ஆயிரத்து 906 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த 3 லட்சத்து 52 ஆயிரத்து 613 விவசாயிகளுக்கு

ரூ.524.25 கோடி பயிர் இழப்பீட்டுத் தொகையானது அவர்களது வங்கிக் கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், டெல்டா அல்லாத வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளில் இதுவரை 17 லட்சத்து 36 ஆயிரம் பேருக்கு 804 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் 3.87 கோடி பேருக்கு பயோ மெட்ரிக் மூலம் அடையாளம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில், 2.52 கோடி பேருக்கு ஆதார் எண் உருவாக்கப்பட்டுள்ளது.

மக்களைத் தேடி வருவாய் அலுவலர்கள் செல்லும் "அம்மா' திட்டத்தின் கீழ், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு 27.50 லட்சம் மனுக்கள் பெறப்பட்டன. அதில், 17.1 லட்சம் மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது.

வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ், 4 ஆயிரத்து 355 கிராமங்களில் வசிக்கும் 68.1 லட்சம் பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது என்றார் அமைச்சர் வெங்கடாசலம்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், வருவாய்த் துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, வருவாய் ஆணையாளர் டி.எஸ்.ஸ்ரீதர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**22.08.2013**

## மதுரை மல்லிகை ;மங்கையர் மயங்கும் பொன்னான மலரல்லவோ



**மதுரை மார்க்கெட்டில் தினமும் 10 டன் விற்பனை:** "மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான மலரல்லவோ' என்ற பாடல் வரிக்கேற்ப, மனிதரை மயங்க வைக்கும் சிறப்பு, மல்லிகைப் பூவுக்கு உள்ளது. அதிலும், மதுரை மல்லிக்கு இத்தகுதி அதிகம். புராண காலத்திலேயே, "பெண்களின் கூந்தலுக்கு மணம் வந்தது பூக்களால்தான்' என, சிவபெருமானும், பாண்டிய மன்னனும் கூந்தல் மணத்திற்காக கோபம் கொண்டதும் இதே மதுரையில்தான். மதுரை மல்லி, குண்டு, குண்டாய், கொள்ளை வெள்ளையாய், இதழ் தடிமனாய், எளிதில் உதிராமல், இரண்டு நாட்கள் இருந்தாலும் வாடி வதங்காமல், மருத்துவ குணம் கொண்டது.இந்த மல்லிகைப் பூக்கள், மதுரையில் பல ஆயிரம் குடும்பங்களை வாழ வைக்கின்றன. மல்லிகையின், தாய்ச்செடி ராமேஸ்வரம் தங்கச்சிமடத்தில் இருந்து பதியன்களாக பல்வேறு இடங்களுக்கும் செல்கிறது. திண்டிவனம், சேலம், கோவை, சத்தியமங்கலம், மதுரை, நெல்லை என எந்தப் பகுதிக்குச் சென்றாலும், மதுரை பகுதியில் விளையும் மல்லிகைக்குத்தான் மணக்கும் குணம் அதிகம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், இதற்கு மதுரையில்தான் மார்க்கெட் இருந்தது. பின்

திண்டுக்கல், நிலக்கோட்டை, கொடைரோடு, உசிலம்பட்டி, அருப்புக்கோட்டை என்றாகிவிட்டது. மதுரை மார்க்கெட்டுக்கு, தினமும் 10 டன் உட்பட, 6 மார்க்கெட்டுகளிலும் 50 டன்னுக்கும் மேலாக மல்லிகைப்பூ விற்பனைக்கு வருகிறது. ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், இவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு லட்சம் பேராவது இத்தொழிலில் இருப்பர்.ஜனவரி முதல் ஏப்ரல் வரை மல்லிகைப்பூ உற்பத்தி அதிகமாக இருக்கும். மே முதல் ஜூலை வரை 50 சதவீதமாகவும், ஆகஸ்ட், செப்டம்பரில் 30 சதவீதமாகவும், அக்டோபர், நவம்பரில் 20 சதவீதமாகவும், டிசம்பரில் 10 சதவீதம் என்ற அளவிலும் இதன் உற்பத்தி இருக்கும். ஒரு கிலோ மல்லிகைப்பூ கிராக்கியான காலங்களில் ரூ. 2000க்கும், மலிவான காலங்களில் ரூ. 20க்கும்கூட விற்பனையாகி உள்ளது. இதனால் நிலையான வருவாய் இல்லாமல் மல்லிகைப்பூ விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர். மல்லிகைப்பூவை கொண்டு மணமுள்ள "சென்ட்' தயாரிக்கலாம். மற்ற மல்லியைவிட, மதுரை மல்லியில் அதிகளவு சென்ட் தயாரிக்க உதவும் மெழுகு கிடைக்கிறது. சென்ட் தயாரிக்க, மதுரையில் 2, நிலக்கோட்டையில் 2, திண்டுக்கல், சேத்தூரில் தலா ஒன்று என, தொழிற்சாலைகள் உள்ளன. பூ உற்பத்தி அதிகமுள்ள காலங்களில் இந்நிறுவனங்கள் அதிகளவு கொள்முதல் செய்து, சென்ட் தயாரிப்பில் ஈடுபடுகின்றன. கிராக்கியான காலங்களில் மல்லிகைப்பூ பக்கத்து மாவட்டங்கள், கேரளம், வெளிநாடு என அனுப்பப்படுகிறது.

**மதுரையின் சொத்து மல்லி:**

உமா கண்ணன், செயலாளர், தியாகராஜர் கல்லூரி("மதுரை மல்லிகை' என்ற புத்தகம் எழுதியவர்): "இன்டாக்' அமைப்பின் சார்பில், கிராமப்புற பெண்களுக்காக மல்லிகை குறித்த பல்வேறு பயிற்சி பட்டறைகள் நடத்தியுள்ளேன். ஆண்கள் பூமாலை கட்டுவதையும், பெண்கள் பூச்சரம் தொடுப்பதையும் தொழிலாக கொண்டுள்ளனர். ஆண்களைப் போல, பெண்களும் மாலை கட்ட ஆரம்பித்தால், கூடுதல் வருவாய் கிடைக்கும். இந்த பயிற்சி பட்டறை அதை சாத்தியமாக்கியது. மாலைகள் வடிவமைக்கும் போது, அவர்களின் கற்பனைத் திறனும் அதிகமாகிறது.நான் எழுதிய "மதுரை மல்லிகை' நூல், மல்லிகைக்கு மட்டுமின்றி மல்லிகை சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் காணிக்கை.

மதுரையின் சொத்தான மல்லி, மக்களின் வாழ்வோடு இரண்டறக்கலந்துள்ளது. மதுரை மக்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் மல்லிகை பற்றிய பல சுவாரசியமான தகவல்கள் இந்நூலில் இடம்பெற்றுள் ளன. புவிசார் குறியீடு (ஜி.இ.,) பெற்றது, பெருமைக்குரிய விஷயம்.தொடர்புக்கு: malligai madurai@gmail.com

**மல்லிகை ஒழுக்கத்தின் அடையாளம்:**

விஜயலட்சுமி, பாத்திமா கல்லூரி மாணவி: மாணவிகளுக்கு, மல்லிகை ஒழுக்கத்தின் அடையாளம். நவீனத்தில் "லூஸ் ஹேர்' கலாசாரம் வந்தாலும், கல்லூரிக்கு வரும் போது, மல்லிகை சூடிவருவதை, எந்த மாணவியும் தவிர்ப்பதில்லை. மதுரையில் பிறந்து, மதுரை மல்லியை வெறுக்கும் பெண் உண்டா? மல்லிகைப் பூ சூடும் போது, நம்மை அறியாமலேயே, புத்துணர்ச்சி வரும். அதனால் தான், தன் மகள் மல்லிகை சூட, அம்மாக்கள் ஆர்வம் காட்டுகின்றனர். எனக்கு தெரிந்தவரை, மல்லிகையை விரும்பாத மாணவியை, பார்ப்பது அரிது தான். அது அன்றைய மாணவியாகட்டும், இன்றைய மாணவியாகட்டும், நாளைய மாணவியாகட்டும்; அனைவரும் ஒன்று தான்.

**மல்லி ஏற்றுமதி பாதிக்கும் அபாயம்:**

தொழில் வர்த்தக சங்கத் தலைவர் ஜெகதீசன்: மதுரையில் இருந்து வளைகுடா நாடுகளுக்கு, கோவை, திருச்சி, கொச்சி வழியாக மலர்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மதுரையில் இருந்து ஒரு டன் அளவிற்கு மல்லிகை உட்பட பல்வகை மலர்களை ஏற்றுமதி செய்ய முடியும். ஆனால், விமான நிலையத்தில் அதற்கான வசதி இல்லாததால், தினமும் 500 கிலோ வரை மட்டுமே அனுப்பப்படுகிறது. மதுரை விமான நிலையத்திற்கு, மூன்று மாதத்திற்கு முன்தான், சரக்கு கையாள சுங்கத்துறை அனுமதி அளித்தது. ஆனால், அதற்குரிய எந்த வசதியும் இல்லை. உதாரணமாக, மலர்களை அனுப்ப முன்கூட்டியே "புக்கிங்' செய்யும்போது, அவை சுங்கத்துறை கட்டுப்பாட்டில் வந்துவிடும். விமானத்தில்

அனுப்பும் வரை, அதை பாதுகாக்க "குளிரூட்டப்பட்ட வைப்பு அறை' இல்லை. பழைய டெர்மினல் கட்டடத்தில், பயணிகள் காத்திருக்கும் அறையை "வைப்பு அறையாக' பயன்படுத்தலாம். மேலும், ஏற்றுமதி காய்கறி, மலர்களில் பூச்சி, புழு போன்றவை உள்ளதா என ஆய்வு செய்ய வேளாண் அதிகாரிக்கான அலுவலகம் இல்லை. சரக்குகளை கையாள பிரிவுக்கென தனி அதிகாரி இல்லை. இந்நிலை தொடர்ந்தால், ஏற்றுமதி முற்றிலும் பாதிக்கும் அபாயம் உள்ளது.

**மல்லிகை உற்பத்தி அதிகரிக்க என்ன வழி:**

மதுரை பூவியாபாரிகள் சங்க தலைவர் சோ.ராமச்சந்திரன்: விலைமலிவான காலங்களில், சென்ட் தயாரிப்பு நிறுவனங்கள் கட்டுப்படியான விலைக்கு கொள்முதல் செய்தால், மல்லிகை விவசாயிகள் நஷ்டப்பட மாட்டார்கள். மதுரை விமான நிலையம், சர்வதேச நிலையமாகி, பொருட்களை எளிதில் கொண்டு செல்ல அனுமதிக்கும்போது, மல்லிகையை அதிகளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். மதுரை மல்லி புவிசார் குறியீடு பெற்றிருந்தாலும் இதுபோன்ற மேம்பாடும் பெற வேண்டும். இதற்கென ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு இதுவரை ஆலோசனை எதுவும் நடத்தவில்லை. மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொண்டால் மல்லிகை இன்னும் மணம் பெறும் என்பது உண்மை.

**செடி ஒன்று; பலன் 15 ஆண்டு:**

மதுரையில் வலையபட்டி, ஆலங்குளம், கொம்பாடி, வெடத்தகுளம், சின்ன உலகானி, பெரிய உலகானி, தொட்டியபட்டி, உசிலம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் மல்லிகைப்பூ சாகுபடி நடக்கிறது.வலையபட்டி மல்லிகை பூ விவசாயி சிங்கராஜ்: நூறு நாள் வேலை திட்டத்துக்கு பலர் சென்று விடுகின்றனர். இதனால், பூ விவசாயத்திற்கு ஆட்கள் கிடைப்பது கடினம். மல்லிகை செடியை ஒரு முறை நடவு செய்த பின், ஆறாவது மாதத்தில் இருந்து பலன் கொடுக்கும். 15 ஆண்டுகள் வரை பூ கிடைக்கும். கிணற்று பாசன வசதி இல்லாத பூ விவசாயிகள், வாடகை தண்ணீர் லாரிகளை வரவழைத்து செடிகளை காப்பாற்றி வருகின்றனர். ஒரு லாரி தண்ணீர் ரூ.1500. செடிகளை காப்பாற்றுவதற்காக, விவசாயிகள் தண்ணீருக்கு அதிக பணம் செலவு செய்கின்றனர்.

**மண்ணின் மலர்:**

சுகந்தி, குடும்ப தலைவி: நான் தினமும், மல்லிகை பூவை தலையில் வைக்காமல் வெளியே செல்வதேயில்லை. சிலர் தலைக்கு பூ வைப்பதையே தவிர்த்து விடுகின்றனர். பெண்களுக்கு தலை நிறைய பூ வைப்பது, அழகாக இருப்பதோடு மங்கலகரமாக தெய்வீக உணர்வை தரும். அதுவும் மதுரை பெண்கள் மல்லிகை வைப்பது மலரின் மணத்தை மட்டுமல்ல, நம் மண்ணின் மணத்தையும் மற்ற ஊர்க்காரர்களுக்கு தெரியப்படுத்தும். தினமும் 30 ரூபாய்க்கு வாங்குவேன்.

**பொத்திவச்ச மொட்டு:**

சுப்புலட்சுமி, மல்லிகை பூ வியாபாரி, அம்மன் சன்னதி: அம்மன் சன்னதியில், 45 ஆண்டுகளாக மல்லிகை பூ வியாபாரம் செய்து வருகிறேன். நாள் ஒன்றுக்கு 10 கிலோ வரை வாங்குகிறேன். காலை 5 மணி முதல், மதியம் 12 மணிவரையும், பின் 4 மணியிலிருந்து இரவு 9 மணிவரையிலும் வியாபாரம் நடக்கும். நான் கொண்டு வருவது அனைத்தும் ஒரே நாளில் விற்று தீர்ந்து விடும். கிலோ 250க்கு வாங்கி, முழம் ஒன்றுக்கு ரூ.10 என விற்கிறோம். மலர்ந்த மல்லிகையை விட, மொட்டுகளாக மலராத மலர்களையே அதிகம் கேட்டு வாங்குகின்றனர்.

## ரேஷன் கடையில் கூடுதல் விலையில் வெங்காயம்: வாங்க ஆளின்றி தேக்கம்: கூட்டுறவுத் துறைக்கு நஷ்டம்

சிதம்பரம் : வெளி மார்க்கெட்டை விட ரேஷன் கடைகளில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் வாங்க ஆளின்றி வெங்காயம் தேக்கமடைந்துள்ளது. சிதம்பரம் நகரில் பொது வினியோகத் திட்டத்தின் கீழ் 23 ஆயிரம் ரேஷன் கார்டுகளுக்கு 23 நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுகிறது.இதில் சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கீழ் 16 ரேஷன் கடைகளும், சரவணபவ கூட்டுறவு பண்டகசாலையின் கீழ் 7 ரேஷன் கடைகளும் செயல்படுகிறது.

உணவுப் பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும் நேரங்களில் கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் ரேஷன் கடைகளில் அடக்க விலை அளவில் விற்பனை செய்யப்படும்.

கடந்த சில தினங்களாக பல்லாரி வெங்காயம் விலை வீர்ரென உயர்ந்து 65 ரூபாய் வரை விற்றது.

வெளி மார்க்கெட்டில் பல்லாரி வெங்காயம் அதிக விலை உயர்வு ஏற்பட்டதால், சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம், திண்டுக்கல் சந்தையில் 5 டன் வெங்காயம் மொத்தமாக கொள்முதல் செய்து வந்தது.

கடந்த 18ம் தேதி முதல் ரேஷன் கடைகளில் விற்பனை செய்ய கூட்டுறவு அதிகாரிகள் திட்டமிட்டு, கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் 16 ரேஷன் கடைகளுக்கு மட்டும் தலா 300 கிலோ வீதம் வழங்கி கிலோ 57 ரூபாய்க்கு விற்பனை செய்ய உத்தரவிட்டது.

ஆனால், தற்போது வெளிமார்க்கெட்டில் தரமான வெள்ளை பல்லாரி வெங்காயம் 55 ரூபாய்க்கும், ரோஸ் 45 ரூபாய்க்கும் கிடைக்கிறது. இதனால் பொதுமக்கள் ரேஷன் கடைகளில் விற்கப்படும் வெங்காயத்தை வாங்க விரும்பவில்லை.ரேஷன் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள வெங்காயம் வாங்க ஆள் இல்லாமல் மூட்டையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனால் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு 2.5 லட்சம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

## 6 லட்சம் மெ.டன் நெல் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு தமிழகத்தில் அரிசி விலை குறையும் என எதிர்பார்ப்பு

சேலம்: பாசனத்துக்கு, தொடர்ந்து தண்ணீர் கிடைத்து வருவதால், தமிழகத்தில் நடப்பாண்டு, ஆறு லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி அதிகமாக இருக்கும், என எதிர்பார்க்கப்படுகிறது.

சேலம் அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் சியாமளநாதன் கூறியதாவது:

மேட்டூர் அணை நிரம்பியதால், டெல்டா மாவட்டங்களுக்கு அதிகளவு பாசனம் நீர் கிடைத்துள்ளது. இதன் மூலம், இந்தாண்டு நெல் உற்பத்தி அதிகரிக்கும்.

இதுமட்டுமின்றி, தென் மாவட்டங்களில் அதிகளவு மழை பெய்துள்ளதால், அங்கும் நெல் உற்பத்தி அளவுக்கு அதிகமாக இருக்கும்.

கர்நாடக மாநிலத்தில், நெல் விளைச்சல் அதிகரித்துள்ளது. தற்போது அங்கிருந்து வரக்கூடிய அரிசி ரகங்களின் விலை குறைந்து வருகிறது. ஒரு கிலோ, கர்நாடகா டீலக்ஸ் அரிசி, 47 ரூபாயில் இருந்து, 43 ரூபாயாக குறைந்துள்ளது.
தமிழகத்தில், பொன்னி பச்சரிசி உற்பத்தி செய்யப்படுவதில்லை. ஆந்திர மாநிலம் மற்றும் கர்நாடக மாநிலத்தில் இருந்து வருகிறது. பொன்னி பச்சரிசி, ஒரு கிலோவுக்கு, நான்கு ரூபாய் குறைந்து, 75 கிலோ மூட்டைக்கு, 300 ரூபாய் குறைந்துள்ளது. தற்போது, மொத்த மார்க்கெட்டில், ஒரு கிலோ பச்சரிசி, 48 ரூபாய்க்கு விற்பனையாகிறது. அதே போல், பொங்கல் பச்சரிசி, ஒரு கிலோ, 36 ரூபாயிலிருந்து, 33 ரூபாயாக குறைந்துள்ளது.
தமிழகத்தில், செஞ்சி பகுதியில் இருந்து வரும், வெள்ளை பொன்னி, ஒரு கிலோ, 46லிருந்து, 43 ரூபாயாகவும், பி.பி.டி. ரகம் ஒரு கிலோ, 42லிருந்து, 38 ரூபாயாகவும் குறைந்துள்ளது. அதேபோல், ஏ.டி.டி.43 ரகம் அதிசய பொன்னி, ஒரு கிலோ, 30லிருந்து, 28 ரூபாயாக குறைந்துள்ளது. ஏ.டி.டி.45 ரகம் அரிசி ஒரு கிலோ, 29லிருந்து, 26 ரூபாயாக குறைந்துள்ளது.
அதிகளவு விற்பனையாகும், கிராம்திகார் இட்லி அரிசி ஒரு கிலோ, 35லிருந்து, 33 ரூபாயாக குறைந்துள்ளது. ஏ.டி.டி. இட்லி அரிசி ஒரு கிலோ, 30லிருந்து, 27 ரூபாயாக குறைந்துள்ளது. அம்பை, 16 ரக அரிசி ஒரு கிலோ, 30லிருந்து, 27 ரூபாயாக குறைந்துள்ளது.
கர்நாடகாவில் நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதாலும், மேட்டூர் அணையில் இருந்து டெல்டா மாவட்டங்களுக்கு அதிகளவு தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில், டெல்டா மாவட்டங்களிலும் போதுமான மழை பெய்துள்ளதாலும், நடப்பாண்டு அதிகளவு நெல் விளைச்சல் இருக்கும். 20 ஆண்டுக்கு பின், தென் மாவட்டங்களில் அதிகளவு மழை பெய்துள்ளதால் நெல் விளைச்சல் அமோகமாக இருக்கும்.
தமிழகத்தில் ஓராண்டுக்கு வழக்கமாக, 19 லட்சம் மெட்ரிக் டன் நெல்

உற்பத்தியாகும். இந்தாண்டு கூடுதலாக, ஆறு லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தியாகி, 25 லட்சமாக உயரும்.
இவ்வாறு அவர் கூறினார்.

## பருத்தி உற்பத்தி 3.72 கோடி பொதிகளாக உயரும்



மும்பை:வரும் 2013-14ம் பருவத்தில் (அக்.,-செப்.,) நாட்டின் பருத்தி உற்பத்தி, நடப்பு பருவத்தை விட, 5 சதவீதம் அதிகரித்து, 3.72 கோடி பொதிகளாக (ஒரு பொதி- 170 கிலோ) உயரும் என, இந்திய பருத்தி கழகம் தெரிவித்துள்ளது.
**பருவ மழை:**நடப்பு ஆண்டில், பருத்தி உற்பத்திஆகும் பல மாநிலங்களில், பருவமழை நன்கு பெய்து வருவதால், வரும் பருவத்தில் இதன் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புஉள்ளதாக, இக்கழகத்தின் முதல் மதிப்பீட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.இருப்பினும், பருத்தி சாகுபடி பரப்பளவு, நடப்பு பருவத்தின் அளவான, 116.14 லட்சம் ஹெக்டேர் என்ற அளவில் தான் இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.
இது, கடந்த, 2011 - 12ம் பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட சாகுபடி பரப்பளவை விட, 5 லட்சம் ஹெக்டேர் குறை வாகும். ஒட்டு மொத்த அளவில், வரும் பருவத்திற்கான சாகுபடி பரப்பளவில் மாற்றம் இல்லை என்றாலும், குஜராத் மாநிலத்தில், சாகுபடி பரப்பளவு, 10 சதவீதம் அதிகரித்துள்ளது.கடந்த ஆண்டு பருவமழை குறைந்து போனது மற்றும் ஒரு சில மாவட்டங்களில், கடும் வறட்சி

நிலவியது போன்றவற்றால், குஜராத்தின் மொத்த பருத்தி சாகுபடி பரப்பளவு குறைந்து, உற்பத்தியும்சரிவடைந்துள்ளது.

நடப்பு பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.56 கோடி பொதிகளாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த, 2011- 12ம் பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி,சாதனை அளவாக, 3.73 கோடி பொதிகளாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**கையிருப்பு:**நடப்பு பருவத்தின் துவக்கத்தில், 1.41 கோடி பருத்தி பொதிகள் கையிருப்பில் இருந்தது.இந்நிலையில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பருத்திக்கான தேவை அதிகரித்து வருவதால், இதன் விலை, கடந்த ன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது.ஒரு கேண்டி (ஒரு கேண்டி-356 கிலோ) பருத்தியின் விலை, தற்போது 47,000-47,500 ரூபாய் என்ற அளவில் உள்ளது.

## மழை இல்லாததால் உழவு பணிகளில் தொய்வு காய்கறி உற்பத்தி வீழ்ச்சியடையும் நிலை

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திம் பகுதியில் தொடர் மழை இல்லாததால் நன்செய், மானாவாரி நிலங்களில் உழவு செய்தல் உள்ளிட்ட ஆயத்த பணிகள் மேற்கொள்ளப் படவில்லை. இதனால் காய்கறி உற்பத்தி முழு வீழ்ச்சி அடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

சில நாட்களாக மாவட்டத்தில் பல இடங்களில் மழை பெய்த போதிலும் ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் சிறிதளவு கூட மழை பெய்யவில்லை. இதனால் நிலத்தடி நீர்மட்டம் அதளபாதாளத்திற்கு சென்று விட்டது.

பல கிராமங்களில் ஆயிரம் அடிவரை போர் அமைத்தும் நீர் கிடைக்கவில்லை. இதனால் பல பகுதிகளில் குடிநீர் போதுமான அளவிற்கு கிடைக்காமல் உள்ளது. பல இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. ஒட்டன்சத்திரத்தில் உள்ள நிலங்களில் அதிகப்படியானவை, பரப்பலாறு அணையை மட்டுமே நம்பி உள்ளது. இப்பகுதியில் உள்ள குளங்கள் மற்றும் நகராட்சியின் குடிநீர் தேவை அனைத்திற்கும் பரப்பலாறு அணைதான் நீராதாரமாகும். கடந்த ஆண்டு அணை

வறண்டதால், இப்பகுதியில் உள்ள குளங்களும் வறண்டு விட்டன.குளத்தில் நீர் தேங்கி இருந்தால், சுற்றி உள்ள கிணறுகளுக்கு நீர்மட்டம் கிடைத்திருக்கும். குளம் வறண்டு விட்டதால், கிணறுகளும் வற்றி விட்டது.கடந்த ஆண்டும் இதே போல் மழை பெய்யாததால், பெரும்பான்மையான மானாவாரி நிலங்களில் முதற்கட்ட உழவுப் பணிகள் தொடங்காமல் இருந்தது. கிணற்றுப்பாசனம் உள்ள நிலத்தில் மட்டும் <உழவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த ஆண்டு கிணறுகள் வறண்டதால், நன்செய் நிலங்களிலும் உழவுப் பணிகள் தொடங்கப்பட வில்லை. கடந்த ஆண்டுக்கு முன்பும் இதே போல் சரிவர மழை பெய்யாததால் நடவுப் பணிகள் தாமதமாகின. இந்த ஆண்டும் இதுவரை உழவுப் பணிகள் செய்யுமளவிற்கு கூட போதுமான அளவு மழை பெய்யவில்லை. இதனால் விவசாயிகள் ஏமாற்றத்துடன் காணப்படுகின்றனர். விவசாய பணிகள் மேற்கொள்ளப்படாததால், காய்கறி உற்பத்தி முற்றிலுமாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

### வாடிய தென்னை கணக்கெடுப்பு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம்

பழநி : திண்டுக்கல் மாவட்டத்தில் வாடிய தென்னைமரங்கள் குறித்து கணக்கெடுக்கும் பணியில் அந்தந்த வருவாய்துறைப்பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

போதிய மழையில்லாமல், நெல்,மக்காசோளம், மா, வாழை, தென்னை, கொய்யா உட்பட விவசாயப்பணிகள் முழுமையாக பாதிக்கப்பட்டு, மழையைநம்பி நடவு செய்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நெல், மக்காசோளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்கனவே கணக்கெடுப்பு நடந்து வறட்சிநிவாரணம் வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து தென்னை விவசாயிகளுக்கு வறட்சிநிவாரணம் வழங்க, அரசு முடிவு செய்துள்ளதால், மாவட்டத்தில் காய்ந்த தென்னை நிலங்களை கணக்கெடுக்கும் பணி நடக்கிறது.

ஆர்.டி.ஓ.,ரவிச்சந்திரன் கூறுகையில், "அந்தந்த கிராம வருவாய் ஆய்வாளர்,வி.ஏ.ஓ.,தலையாரி மூலம் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள்

கணக்கெடுக்கும் பணி நடக்கிறது. அறிக்கை அரசுக்கு விரைவில் தாக்கல் செய்யப்படும். அதன்பின் நிவாரணம் வழங்கப்படும்,"என்றார்.

## சிறு, குறு விவசாயிகளுக்கு முழு மானியத்தில் பாசன கருவி

.சிவகங்கை : ""நடப்பாண்டு, 1,925 ஏக்கரில்,விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசன கருவிகள் பொருத்தப்பட உள்ளதென," தோட்டக்கலைதுறை துணை இயக்குனர் இருளப்பன் தெரிவித்தார்.
அவர் கூறியதாவது, தேசிய நுண்ணீர் பாசன இயக்கம் மூலம், சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும், சொட்டு நீர் பாசன கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது.
இதில், பழப்பயிர்கள், காய்கறி, பூக்கள், மிளகாய் உள்ளிட்ட பயிர்களுக்கு சொட்டுநீர் பாசன கருவிகள் அமைக்கப்படுகிறது. நடப்பாண்டு, மாவட்ட அளவில், 1,925 எக்கர் பரப்பில் நுண்ணீர் பாசன கருவி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
இதற்காக, வட்டார வாரியாக விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர்.
இது வரை, 696 விவசாயிகளுக்கு, 538 எக்டேர் நிலப்பரப்பில் இக்கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து வட்டாரங்களிலும், நுண்ணீர் பாசன கருவிகள் அமைக்க விரும்பும், விவசாயிகள் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம், என்றார்.

## மண் மாதிரி சேகரிப்பு சிறப்பு முகாம்

சிவகங்கை : ""சிவகங்கையில், விவசாய ஆராய்ச்சி நிலைய மாணவர்களை கொண்டு, மாவட்டத்தில், இளையான்குடி, மானாமதுரை ஒன்றியத்தில், உள்ள கிராமங்களில் மண் மாதிரி சேகரிப்பு முகாம் நடந்தது. இக்கிராமங்களில், 46 மாணவர்கள், 920 மண் மாதிரிகளை எடுத்து, ஆய்வுக்கு அனுப்பியுள்ளனர். ஆக., 24ல் திருப்புவனம், சிங்கம்புணரி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில், மண் மாதிரி சேகரிப்பு முகாம் நடைபெறும், என இணை இயக்குனர் செல் லத்துரை

தெரிவித்தார்.3

3பேரூராட்சி நிதியில் நிழற்குடை தேவை

## கொடிவகை காய்கறிகள் விதைகள் இலவசமாக விற்பனை

செய்துங்கநல்லூர்: நோய்களை கட்டுப்படுத்தும் கொடிவகை காய்கறிகளை பயிரிட விதைகள் இலவசமாக வழங்கப்படுவதாக தோட்டக்கலை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

கருங்குளம்யூனியனில் முதலமைச்சரின் சிறப்புத் திட்டமான தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் பந்தல் அமைத்து காய்கறிகளை பயிரிடலாம் இந்த பயிர்களுக்கான விதைகள் தோட்டக்கலைத் துறை மூலம் இலவசமாக வழங்கபடஉள்ளதாக கருங்குளம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் நாகராஜன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவள் கூறியதாவது; கருங்குளம் யூனியனில் இத்திட்டம் சிறப்பாக நடந்து வருகிறது. இதன் மூலம் விவசாயிகள் அதிக லாபம் அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு இத்திட்டத்தின் மூலம் சிங்கத்தாகுறிச்சி, வடக்கு காரசேரி, நாணல்காட்டான்குளம், முறப்பநாடு, ஆழ்வார் கற்குளம், மணக்கரை, ஆகிய சிராமங்களில் 5 ஏக்கர் பரப்பில் இந்த பந்தல் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதற்காக ஒரு ஏக்கருக்கு விவசாயிகள் ரூ. ஒரு லட்சத்து 20 ஆயிரம் செலவு செய்தனர். இதற்கு மானியமாக அரசு 60 ஆயிரம் ரூபாய் கொடுத்துள்ளது. மேலும் இதற்கான விதைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இதில் பாகற், புடல, சுரைக்காய், பீர்க்காய் உள்ளிட்ட கொடி வகை காய்கறிகள் பயிரிட வேண்டும். விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்க கூடியதாகும் பந்தல்களை கல் தூண் அல்லது சிமெண்ட் தூண் அமைத்து இக்காய்கறிகளை பயிரிடலாம்.

இதனால் அதிக ‹ரிய ஒளி கிடைக்கும், மருந்து தெளிப்பதற்கும் வசதியாக இருக்கும், அதிக அளவு இடம் இருப்பதால் வடுதல் பயிர்களை பயிரிடலாம், காய்கள் நன்கு பருமனாக இக்காய்கறிகளை பயிரிட இந்த ஆண்டு இந்த யூனியனுக்கு 2.1/2 ஏக்கர் அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 50 சதவீதம் மானியத்திலும், இலவசமாக விதைகளை பெற்றுக்கொள்ளாம் விரும்பும்

விவசாயிகள் தங்கல் நில உடமை பட்டா, ரேஷன்கார்டு நகல், போட்டோ ஆகிய வற்றுடன் அணுகவும்.இவ்வாறு அவர் கூறினார்.

தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் ரூ.4,500 கோடி கடன் வழங்க இலக்கு

கிருஷ்ணகிரி: தொடக்க வேளாண்மை கூட்டுற வங்கிகள் மூலம், இந்த ஆண்டு, 4,500 கோடி ரூபாய் பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
தர்மபுரி மற்றம் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கான ஆய்வு கூட்டம், கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.
கலெக்டர் ராஜேஸ் தலைமை வகித்தார்.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் சீத்தாராமன் முன்னிலை வகித்தார்.
அமைச்சர் செல்லூர் ராஜூ பேசியது:
முதல்வர் ஜெயலலிதா ஆட்சியில், தமிழகத்தில் அனைத்து துறைகளும் சிறப்பாக செயல்படுகிறது. இதில், கூட்டுறவுத்துறை மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கூட்டுறவு வங்கிகளில், புதியதாக தேர்வு செய்யப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு, நிர்வாகம் குறித்து, சென்னையில் பயிற்சி அளிக்கப்பட்டது.
மும்பையில் தலைமை கூட்டுறவு இணையம் உள்ளது.
இந்த இணையம், ஆண்டுதோறும் இந்திய அளவில் சிறப்பாக செயல்படும் கூட்டுறவு வங்கிகளை தேர்வு செய்து, பரிசு வழங்கி வருகிறது. 2012-13ம் ஆண்டில் இந்திய அளவில் செயல்படும், 97 ஆயிரத்து, 413 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், தர்மபுரி மாவட்டம், துறிஞ்சிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி சிறந்த வங்கியாக தேர்வு செய்யப்பட்டு, முதல் பரிசை பெற்றது.
மேலும், 370 மாவட்ட வங்கிகளில், திருச்சி மாவட்ட வங்கி முதல் பரிசையும், 37 மாநில வங்கிகளில், தமிழ்நாடு மாநில வங்கி, இரண்டு பரிசுகளையும் பெற்றது.
இந்த பரிசுகள் பெற அலுவலர்கள் முக்கிய காரணமாக இருந்துள்ளனர்.
இந்த ஆண்டு, அனைத்து பரிசுகளையும் தமிழகத்தில் உள்ள வங்கிகள் பெற வேண்டும். பொது விநியோக திட்டத்தில், ஹேண்ட் பில்லிங் போன்ற சிறப்பு

திட்டங்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு, கூட்டுறவு துறையில் கிருஷ்ணகிரி மாவட்டம் முன்னோடி மாவட்டமாக உள்ளது.

கடந்த ஆண்டு, தமிழகத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம், 4,000 கோடி ரூபாய் பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 4 ஆயிரத்து, 84 கோடி ரூபாய் பயிர் கடன் வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு, 4,500 கோடி ரூபாய் பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள, 25 ஆயிரத்து, 413 கூட்டுறவு வங்கிளுக்கு தேர்தல் நடத்தப்பட்டது.

இந்தியாவில், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், தமிழக முதல்வரின் ஆணைப்படி கூட்டுறவு சங்க தேர்தலில், 18 சதவீதம் ஆதிதிராவிடர்களுக்கும், 30 சதவீதம் பெண்களுக்கு பதவிகள் தமிழகத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

கூட்டத்தில், எம்.எல்.ஏ.,க்கள் கிருஷ்ணமூர்த்தி, மனோரஞ்சிதம் நாகராஜ், மாவட்ட பஞ்சாயத்து சேர்மன் அசோக்குமார், தர்மபுரி மாவட்ட கூட்டுறவு வங்கி தலைவர் கேசவன், கிருஷ்ணகிரி மண்டல இணைப்பதிவாளர் ராஜேந்திரன், தர்மபுரி மண்டல இணை பதிவாளர் ராமதாஸ், தர்மபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் ஆனந்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### தக்காளி விலை சரிவு: விவசாயிகள் கவலை

பாலக்கோடு: தக்காளி விலை தொடர்ந்து சரிந்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம், அரூர் உட்பட மாவட்டம் முழுவதும் தக்காளி, 22 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தமிழக அளவில், தர்மபுரி மாவட்டம், தக்காளி உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டத்தில் உற்பத்தியாகும் தக்காளிகள் அதிகளவில் பாலக்கோடு தக்காளி மார்க் கெட்டிற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து தமிழகத்தின்

பல்வேறு மாவட்டங்களுக்கும், கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

இதனால், பாலக்கோடு தக்காளி மார்க்கெட் விலையை பொருத்தே தர்மபுரி மாவட்டத்தில், தக்காளி விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. பருவமழை ஏமாற்றியதால் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டது.

இதனால், சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்ததை அடுத்து கடந்த, இரண்டு மாதங்களுக்கு முன், ஒரு கிலோ தக்காளி, 30 ரூபாய்க்கு விற்பனை ஆனாது. வரத்து குறைந்த நிலையிலும் விலை அதிகரித்ததால், தக்காளி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக தென்மாவட்டங்களில் தக்காளி வரத்து அதிகரித்ததுடன், தர்மபுரி மாவட்டத்திலும் தக்காளி விளைச்சல் அதிகரித்துள்ளது.

இதனால், பாலக்கோடு தக்காளி சந்தையில் இருந்து, தென்மாவட்டங்களுக்கும் தக்காளி விற்பனைக்கு கொண்டு செல்லப்படுவது பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், கடந்த சில தினங்களாக தொடர்ந்து தக்காளி விலை சரிந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். நேற்று, பாலக்கோடு தக்காளி மார்க் கெட்டில், 15 கிலோ கொண்ட, ஒரு தக்காளி பெட்டி, 90 ரூபாய் முதல், 110 வரை மட்டும் விற்பனை ஆனாது. கடந்த சில தினங்களாக தக்காளி விலை தொடர்ந்து சரிந்து வருவதால், தர்மபுரி மாவட்ட தக்காளி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## இயற்கை முறையில் விவசாய பொருள் உற்பத்தி திருச்சி மாவட்ட நீதிபதி விருப்பம்

திருச்சி: ""இயற்கை முறையை பயன்படுத்தி அதிகளவிலான விவசாய பொருட்களை உற்பத்தி செய்து, விவசாயிகளும், இந்தியாவும் மேன்மை பெற விவசாயிகள் பாடுபடவேண்டும்,'' என மாவட்ட நீதிபதி வேல்முருகன் பேசினார்.

தேசிய வாழை ஆராய்ச்சி மையம் திருச்சி அடுத்த தாயனூரில் செயல்படுகிறது.

மையத்தின், 20வது நிறுவன நாள் மற்றும் விவசாயிகள் தினவிழா நேற்று நடந்தது.

மையத்தின் இயக்குனர் முஸ்தபா தலைமை வகித்து மலர் வெளியிட, மாவட்ட முதன்மை நீதிபதி வேல்முருகன் பெற்றுக்கொண்டு பேசியதாவது:

அதிகளவு படித்தவர்கள் விவசாயத்துறைக்கு வரவேண்டும். நீதி மற்றும் மருத்துவத்துறையுடன் மக்களின் தொடர்பு இருக்காது. ஆனால், விவசாயத்துடன் தொடர்பு இல்லாமல் இந்த உலகில் யாரும் வாழ முடியாது. விவசாயத்தையும், விவசாய பொருட்களையும் சார்ந்தது, நம் நாடு.

மண் வளம், சீதோஷன நிலைக்கு ஏற்ப விவசாயிகள் பயிரிட வேண்டும்.

விவசாயத்தில் புதுமை புகுத்தியதால், இந்தியா விவசாயத்துறையில் தன்னிறைவு அடைந்துள்ளது. காலத்துக்கு ஏற்ப மாற்றங்களை விவசாயிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதிகளவு பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி உணவுப்பொருட்களை விஷமாக மாற்றக்கூடாது. இந்திய ஜனநாயகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஆரோக்கியமான, சுத்தமான காற்று, நீர், உணவு பெற அடிப்படை உரிமை உண்டு. அந்த அடிப்படை விஷயங்களுக்கு பிரச்னை வரும் செயல்களில் விவசாயிகள் ஈடுபடக்கூடாது.

விவசாயத்தில், பொதுநோக்கத்துடன் கூடிய லாப நோக்கம் இருக்க வேண்டும். சட்டத்துக்குட்பட்டு செயல்பட வேண்டும். இயற்கை முறையை பயன்படுத்தி அதிகளவிலான விவசாய பொருட்களை உற்பத்தி செய்து, விவசாயிகளும், இந்தியாவும் மேன்மை பெற விவசாயிகள் பாடுபடவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினர்.

இயக்குனர் முஸ்தபா பேசியதாவது:

இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து, 360க்கும் மேற்பட்ட அதிக மகசூல் தரக்கூடிய வாழை ரகங்களை தேசிய வாழை ஆராய்ச்சி மையம் சேகரித்து, பாதுகாத்து வருகிறது. மலை வாழை, ரஸ்தாளி, நேந்திரன் ஆகியவை விதை கருத்திசு கூழ்மம் முறையில் அபிவிருத்தி செய்யும் முறையை இந்த மையம் கண்டுபிடித்துள்ளது. இதன் மூலம் ஒரு மி.மீ., கூழ்மத்திலிருந்து, 10 ஆயிரம் வாழை கன்றுகளை உருவாக்க முடியும்.

அகில இந்திய அளவில் வாழை விவசாயிகள் மத்தியில் பிரசித்திப்பெற்ற "பனானா

சக்தி' எனும் வாழை நுண்ணூட்ட கலவையை இம்மையம் தயாரித்துள்ளது.
வறட்சியை தாங்கி வளரக்கூடிய மூன்று புதிய வாழை ரகங்களை கண்டுபிடித்துள்ளது.
வாழையிலிருந்து ஜாம், இனிப்பு வகை, ஊறுகாய், சீவல், வாழைத்தண்டிலிருந்து நார் பொருட்கள் தயாரிக்கும் முறையை தொழில் முனைவோருக்கு பயிற்சி தரும் திட்டம் உள்ளது. எத்திலின் வாயுவை கொண்டு, செயற்கையாக வாழையை பழுக்க வைத்து, அதுபோன்ற வாழைகள் சந்தையில் அதிகளவு இடம் பிடித்துள்ளது.
இவ்வாறு அவர் பேசினார்.
முன்னதாக, முதன்மை விஞ்ஞானி பத்மநாபன் வரவேற்றார். விஞ்ஞானி உமா நன்றி கூறினார்.
மலை வாழை உற்பத்தி
பெருக்க நவீன திட்டம்
இயக்குனர் முஸ்தபா, நிருபர்களிடம் கூறியதாவது:
எல்லா திட்டங்களுக்கும் அரசை மட்டும் விவசாயிகள் நம்பி இருக்கக்கூடாது. கூட்டமைப்பு ஏற்படுத்தி செயல்பட வேண்டும். மகாராஷ்டிராவில், இதுபோன்ற கூட்டமைப்பு ஏற்படுத்தி, பிரமாதமாக திராட்சை பயிரிட்டு, வெளநாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.
அரசு தரும் மானியங்களை முழுமையாக விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். தமிழகத்தில், 30 ஆயிரம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டு வந்த மலை வாழையின் பரப்பளவு, 2,000 ஹெக்டேராக குறைந்துள்ளது. புதிய தொழில்நுட்ப முறைப்படி, மீண்டும் அதிகளவில் மலை வாழை உற்பத்தி செய்யப்பட உள்ளது.

## இயற்கை உரத்தில் நெல் பயிரிட தயாராகும் விவசாயிகள் :அவுரி, சணப்பை, தக்கை பூண்டு விதைப்பு

சம்பா பட்டத்தில், இயற்கைஉரங்களான, அவுரி, சணப்பை, தக்கை பூண்டு ஆகியவற்றை பயன்படுத்தி, பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
காஞ்சிபுரம் மாவட்டத்தில், காஞ்சிபுரம், உத்திரமேரூர், மதுராந்தகம்,

திருக்கழுக்குன்றம், செய்யூர் ஆகிய தாலுகாவில், பாலாற்று நீர் மற்றும் கிணற்று நீரை பயன்படுத்தி, சாகுபடி செய்யும் விவசாயிகள், தற்போது, சம்பா பட்டத்தில், பயிர் செய்ய தயாராகி வருகின்றனர். இதற்காக, வெள்ளை பொன்னி, பாபட்லா ஆகிய நெல் விதைகளை, வேளாண்மை துறை அலுவலகங்களிலிருந்து பெற்று, நாற்று விடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இயற்கை உரம் செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், நாற்று விட்ட, 18 நாட்களில், நடவு செய்வதற்காக, நிலங்களை தயார் செய்து வருகின்றனர். இதற்காக, பசுந்தாள் உரங்களான அவுரி, சணப்பை, தக்கை பூண்டு போன்றவற்றை விதைத்து வளர்த்து உள்ளனர். இயற்கையாக, மண்ணிற்கு தேவையான தழைச்சத்து கிடைப்பதால், ரசாயன உரத்தின் பயன்பாடு மற்றும் செலவு குறைகிறது.கூடுதல் மகசூல் இதுகுறித்து, மணப்பாக்கத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயி ராமானுஜம் கூறுகையில், ""கடந்த ஆண்டு மாவட்டத்தில் அதிகமாக நெல் உற்பத்தி செய்ததற்காக, முதல் பரிசை பெற்றேன். இந்த ஆண்டு, சம்பா பருவத்தில், பயிர் செய்வதற்காக, 10 ஏக்கர் நிலத்தில், அவுரி, சணப்பை ஆகியவற்றை வளர்த்துள்ளேன். இதன் மூலம் கூடுதல் மகசூல் கிடைக்கும். நடவு செய்வதற்கு நாற்று விட்டுள்ளேன். இந்த ஆண்டும், முதல் பரிசை பெறுவதற்கு முயற்சி செய்துவருகிறேன். இம்மாதம், பரவலாக மழை பெய்து வருவதால், கிணறு, ஆழ்துளை கிணறு பாசன விவசாயிகள் நெல் பயிர் செய்வதற்கு, நாற்று விடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்," என்றார்.அதிகாரிப்புஇதுகுறித்து, வேளாண்மை துறைஅதிகாரி ஒருவர் கூறுகையில்,""மாவட்டத்தில், கடந்த ஆண்டு சம்பா பட்டத்தில், 1 லட்சம் ஏக்கரில், நெல்

பயிரிடப்பட்டது. இந்த ஆண்டு, 1.25 லட்சம் ஏக்கரில், நெல் பயிரிடப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு, இயற்கை உரங்களை பயன்படுத்துவதில், விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்," என்றார்.

## பாலாற்றங்கரைகளில் கேழ்வரகு சாகுபடி அமோகம் : லாபம் அதிகம் என்பதால் விவசாயிகள் ஆர்வம்

காஞ்சிபுரம் : நெட்டை ரக கேழ்வரகு சாகுபடியில், பாலாற்றங்கரை பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், பாலாறு மற்றும் செய்யாற்றை ஒட்டியுள்ள மானாவாரி நிலங்களில், கேழ்வரகு பயிரிடப்பட்டு வருகிறது. இதன் சாகுபடியின் பரப்பளவு குறைந்து விட்டாலும், பாலாற்றங்கரையில் உள்ள, ஒரு சில விவசாயிகள் தொடர்ந்து கேழ்வரகை சாகுபடி செய்து வருகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளாக, வாலாஜாபாத் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் நெட்டை ரக கேழ்வரகு பெருவாரியாக பயிரிடப்படுகிறது.

கேழ்வரகு, சோளம், கம்பு ஆகியவற்றின் பயன்பாடு அதிகரித்துள்ளதால், கேழ்வரகு பயிரிடும் விவசாயிகள் நல்ல லாபம் பார்த்து வருகின்றனர். உற்பத்தி குறைவு, தேவை அதிகம் என்ற நிலையில், கேழ்வரகின் விலை எதிர்பார்க்காத அளவிற்கு உயர்ந்துள்ளது.

தற்போது, 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை கேழ்வரகு, 2,500 ரூபாய் வரை விலை போகிறது.

இதையடுத்து, கேழ்வரகு சாகுபடியில் விவசாயிகளுக்கு ஆர்வம் ஏற்பட்டு உள்ளது. வேளாண்மைத் துறை அதிகாரிகளும், கேழ்வரகு மற்றும் தானிய வகை பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும் என, விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குகின்றனர்.

இருப்பினும், கூலி ஆட்கள் பற்றாக்குறை, நவீன இயந்திரங்கள் அறிமுகப்படுத்தாமை போன்றவற்றால், பெரிய அளவில் கேழ்வரகு சாகுபடி செய்வது தடைபட்டு உள்ளது.

கேழ்வரகு சாகுபடி குறித்து, அவளூரை சேர்ந்த விவசாயி வேதகிரி கூறுகையில், ""கேழ்வரகு தற்போது நல்ல விலைபோகிறது. இதனால், தொடர்ந்து, கேழ்வரகை பயிரிட்டு வருகிறேன். தற்போது, ஒரு ஏக்கர் பரப்பளவில் நெட்டை ரக கேழ்வரகை சாகுபடி செய்துள்ளேன். வாரத்திற்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும்.

ஏக்கருக்கு செலவு, 5,000 ரூபாய் ஆகும். கேழ்வரகு, 90 நாட்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். இந்த ஆண்டு நல்ல லாபம் கிடைக்கும் என, எதிர்பார்க்கிறேன்," என்றார்.

## தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு

சென்னை:'தமிழகம், புதுச்சேரியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, மாதவரம், தாம்பரம் உள்ளிட்ட இடங்களில், நேற்று அதிகாலையில், மழை பெய்தது. நேற்று பகலில் வெயில் அடித்தது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறு-கையில்,''தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சென்னை நகரில் வானம் மேகமூட்டமாக காணப்-படும். மாலை அல்லது இரவில் இடி, மின்னலுடன் மழை பெய்ய வாய்ப்பு உள்-ளது,'' என்றார்.

## 6 லட்சம் மெ.டன் நெல் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு தமிழகத்தில் அரிசி விலை குறையும் என எதிர்பார்ப்பு

சேலம்: பாசனத்துக்கு, தொடர்ந்து தண்ணீர் கிடைத்து வருவதால், தமிழகத்தில் நடப்பாண்டு, ஆறு லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி அதிகமாக இருக்கும், என எதிர்பார்க்கப்படுகிறது.

சேலம் அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் சியாமளநாதன் கூறியதாவது:

மேட்டூர் அணை நிரம்பியதால், டெல்டா மாவட்டங்களுக்கு அதிகளவு பாசனம் நீர் கிடைத்துள்ளது. இதன் மூலம், இந்தாண்டு நெல் உற்பத்தி அதிகரிக்கும்.

இதுமட்டுமின்றி, தென் மாவட்டங்களில் அதிகளவு மழை பெய்துள்ளதால், அங்கும் நெல் உற்பத்தி அளவுக்கு அதிகமாக இருக்கும்.

கர்நாடக மாநிலத்தில், நெல் விளைச்சல் அதிகரித்துள்ளது. தற்போது அங்கிருந்து வரக்கூடிய அரிசி ரகங்களின் விலை குறைந்து வருகிறது. ஒரு கிலோ, கர்நாடகா

டீலக்ஸ் அரிசி, 47 ரூபாயில் இருந்து, 43 ரூபாயாக குறைந்துள்ளது.

தமிழகத்தில், பொன்னி பச்சரிசி உற்பத்தி செய்யப்படுவதில்லை. ஆந்திர மாநிலம் மற்றும் கர்நாடக மாநிலத்தில் இருந்து வருகிறது. பொன்னி பச்சரிசி, ஒரு கிலோவுக்கு, நான்கு ரூபாய் குறைந்து, 75 கிலோ மூட்டைக்கு, 300 ரூபாய் குறைந்துள்ளது. தற்போது, மொத்த மார்க்கெட்டில், ஒரு கிலோ பச்சரிசி, 48 ரூபாய்க்கு விற்பனையாகிறது. அதே போல், பொங்கல் பச்சரிசி, ஒரு கிலோ, 36 ரூபாயிலிருந்து, 33 ரூபாயாக குறைந்துள்ளது.

தமிழகத்தில், செஞ்சி பகுதியில் இருந்து வரும், வெள்ளை பொன்னி, ஒரு கிலோ, 46லிருந்து, 43 ரூபாயாகவும், பி.பி.டி. ரகம் ஒரு கிலோ, 42லிருந்து, 38 ரூபாயாகவும் குறைந்துள்ளது. அதேபோல், ஏ.டி.டி.43 ரகம் அதிசய பொன்னி, ஒரு கிலோ, 30லிருந்து, 28 ரூபாயாக குறைந்துள்ளது. ஏ.டி.டி.45 ரகம் அரிசி ஒரு கிலோ, 29லிருந்து, 26 ரூபாயாக குறைந்துள்ளது.

அதிகளவு விற்பனையாகும், கிராம்திகார் இட்லி அரிசி ஒரு கிலோ, 35லிருந்து, 33 ரூபாயாக குறைந்துள்ளது. ஏ.டி.டி. இட்லி அரிசி ஒரு கிலோ, 30லிருந்து, 27 ரூபாயாக குறைந்துள்ளது. அம்பை, 16 ரக அரிசி ஒரு கிலோ, 30லிருந்து, 27 ரூபாயாக குறைந்துள்ளது.

கர்நாடகாவில் நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதாலும், மேட்டூர் அணையில் இருந்து டெல்டா மாவட்டங்களுக்கு அதிகளவு தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில், டெல்டா மாவட்டங்களிலும் போதுமான மழை பெய்துள்ளதாலும், நடப்பாண்டு அதிகளவு நெல் விளைச்சல் இருக்கும். 20 ஆண்டுக்கு பின், தென் மாவட்டங்களில் அதிகளவு மழை பெய்துள்ளதால் நெல் விளைச்சல் அமோகமாக இருக்கும்.

தமிழகத்தில் ஓராண்டுக்கு வழக்கமாக, 19 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தியாகும். இந்தாண்டு கூடுதலாக, ஆறு லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தியாகி, 25 லட்சமாக உயரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு 15,000 கனஅடியாக அதிகரிப்பு

மேட்டூர்: டெல்டா பாசனத்துக்கான நீர்தேவை அதிகரித்ததால், மேட்டூர் அணை நீர்திறப்பு நேற்று வினாடிக்கு, 15,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

கர்நாடகா அணைகளில் இருந்து உபரி நீர்திறப்பு மளமளவென குறைந்து விட்டதால், நேற்று முன்தினம் வினாடிக்கு, 9,967 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று, 7,589 கனஅடியாக சரிந்தது.

இந்நிலையில், டெல்டா பாசனத்துக்கான நீர்தேவை அதிகரித்ததால், வினாடிக்கு, 10,000 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்திறப்பு நேற்று காலை, 8 மணிக்கு வினாடிக்கு, 13,000 கனஅடியாகவும், காலை, 10 மணிக்கு வினாடிக்கு, 15,000 கனஅடியாகவும் அதிகரிக்கப்பட்டது. நேற்று அணை நீர்மட்டம், 118.400 அடியாகவும், நீர் இருப்பு, 90.942 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. நீர்வரத்தை விட, வெளியேற்றம் அதிகரித்துள்ளதால், மேட்டூர் அணை நீர் இருப்பு, நாள் ஒன்றுக்கு அரை டி.எம்.சி., வீதம் சரிகிறது.

## விளை நில மண் ஆய்வு செய்ய திட்டம் வேளாண் இணை இயக்குனர் தகவல்

நாமக்கல்: "மாவட்டத்தில் உள்ள அனைத்து விளை நிலங்களிலும், 2014 மார்ச் மாதத்துக்குள், மண் ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது' என, வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளின் விளை நிலங்களிலும், மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்து, மண்ணின் தன்மை குறித்த ஆய்வறிக்கையை, விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என, அரசு உத்தரவிட்டுள்ளது.

மண்ணில் கலந்துள்ள சத்துக்களின் அளவையும், மண்ணின் ரசாயன தன்மைகளையும், மண் ஆய்வின் மூலமே அறிய முடியும். மண் ஆய்வின் மூலமே, பயிருக்கு ஏற்ற மிகச்சரியான உர பரிந்துரையை வழங்க முடியும். அதன் மூலம் குறைந்த உரச்செலவில், கூடுதல் மகசூலை அடைய முடியும்.

அதனை அடிப்படையாக கொண்டு, விவசாயிகள் பயிர் சாகுபடி மேற்கொள்ளும் முன்பே, மண் மாதிரி சேகரிக்கும் பணி துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணியில், வேளாண் துறை அலுவலர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். நாமக்கல் மாவட்டத்தில் உள்ள இரண்டு லட்சத்து, 34 ஆயிரத்து, 802 விவசாயிகளின் வயல்களிலும், மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்யும் பணி, தற்போது நடந்து வருகிறது.

இப்பணி, 2014ல் முடிவு பெறும். இக்காலக்கட்டத்துக்குள், அனைத்து விவசாயிகளின் வயல்களிலும், மண் மாதிரி எடுக்கப்படும். விவசாயிகளின் அடிப்படை விபரங்கள், பண்ணை பயிர் மேலாண் திட்ட வளைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். நாமக்கல் மற்றும் திருச்செங்கோட்டில் உள்ள மண் ஆய்வுக்கூடங்களுக்கு, மண் மாதிரிகள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. மண் ஆய்வுக்கென, தற்போது பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, போதுமான வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மண் ஆய்வுக்கூடத்தில், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மண்ணின் தன்மை, மண்ணில் உள்ள சத்துக்களின் அளவுகள், கார, அமில தன்மை ஆகியவை வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இந்த முடிவுகளை அடிப்படையாக கொண்டு, விவசாயிகள் பயிரிட உள்ள பயிர்களுக்கு, தேவையான உர அளவுகள் பரிந்துரை செய்யப்படும். மேலும், அனைத்து விவசாயிகளுக்கும், மண் ஆய்வின் அடிப்படையில், ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு வழங்கப்பட்டு வருகிறது. மார்ச், 2014க்குள், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் கையேடு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, அனைத்து விவசாயிகளும், தங்களது, வயலில் மண் மாதிரி சேகரித்து, அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களுக்கு அனுப்பி பயன் பெறலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பருப்பு, உளுந்துக்கு பற்றாக்குறை ஏழை, நடுத்தர மக்கள் அதிருப்தி

ஓசூர்: ஓசூர் தாலுகாவில்உள்ள ரேஷன் கடைகளில் பருப்பு, உளுந்து மற்றும் மண்ணெண்ணை பற்றாக்குறையால் பொதுமக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மொத்தம், நான்கு லட்சத்து, 58 ஆயியிரத்து, 324 ரேஷன் கார்டுகள் உள்ளன. 935 ரேஷன் கடைகள் உள்ளன. பொதுவினியோக திட்டம் மூலம் ரேஷன் கடைகளுக்கு சர்க்கரை, பருப்பு, உளுந்து உள்ளிட்ட ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது. கடந்த காலத்தில் நடுத்தர மற்றும் ஏழை தொழிலாளர் குடும்பத்தினர் மட்டும் ரேஷன் கடைகளுக்கு சென்று ரேஷன் பொருட்கள் வாங்கி வந்தனர். இதனால், ரேஷன் கடைகளில் சர்க்கரை, அரிசி மற்றும் மண்ணெண்ணை தட்டுப்பாடு இல்லாமல் பொதுமக்களுக்கு கிடைத்தது. ரேஷன் கடைகளில் போதிய கண்காணிப்பும் இல்லாமல் இருந்தது.

அதனால், ரேஷன் கடை ஊழியர்கள் தாராளமாக ரேஷன் பொருட்களை வியாபாரிகள் மூலம் கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநிலங்களுக்கு கடத்தி அதிக லாபம் சம்பாதித்தனர். தற்போது இலவச அரிசி, மலிவு விலை பருப்பு, உளுந்து, சீனி, மண்ணெண்ணை மற்றும் மளிகை சமான்கள் உள்ளிட்ட அன்றாட சமையலில் முக்கிய பங்கு வகிக்கும் பொருட்கள் வழங்கப்படுகிறது. இந்த பொருட்கள் வெளிமார்க்கெட்டில், ரேஷன் கடைகளை விட பலமடங்கு கூடுதல் விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

அதனால், நடுத்தர மற்றும் உயர் வகுப்பு குடும்பத்தினரும் தற்போது ரேஷன் கடைகளில் சீனி, பருப்பு, உளுந்து, ஆயில் மற்றும் மண்ணெண்ணை வாங்க படையெடுக்கின்றனர். அதனால், ரேஷன் கடைகளில் போதிய இருப்பு இல்லாமல் பற்றாக்குறை ஏற்படுகிறது. முந்துவோருக்கு மட்டும் ரேஷன் பொருட்கள் கிடைக்கிறது. மற்றவர்களுக்கு ரேஷன் பொருட்கள் கிடைப்பது இல்லை. குறிப்பாக பருப்பு, உளுந்து, ஆயில் மற்றும் மண்ணெண்ணை மாதந்தோறும் மிகுந்த பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால், பொதுமக்கள் முக்கிய ரேஷன் பொருட்கள் கிடைக்காமல் அதிருப்தியடைந்துள்ளனர்.

இதுகுறித்து ஓசூர் வட்ட வழங்கல் அலுவலர் பாலசுந்திரத்திடம் கேட்டபோது,

""பருப்பு, உளுந்து மற்றும் மண்ணெண்ணையைதவிர மற்ற பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கிறது. பருப்பு, 72 சதவீதமும், உளுந்து, 60 சதவீதம், மண்ணெண்ணை 55 சதவீதம் மட்டும் ரேஷன் கடைகளில் வினியோகம் செய்யப்படுகிறது. அதனால், தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, " என்றார்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் சோலார் பம்புகள்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம், 2013 - 14ம் ஆண்டுக்கு விவசாயிகளின் நீர்பாசன தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சூரிய சக்தியில் இயங்கக்கூடிய பாசன வசதியினை ஏற்படுத்தவும், மின்சாரத்தை எதிர்நோக்கி இல்லாமலும், பிற எரிபொருள் செலவின்றியும், இயற்கையாக செலவின்றி கிடைக்கும் சூரிய சக்தியினை விவசாய நீர்பாசனத்திற்கு உபயோகிக்க வழிவகை செய்யவும், தொலைதூர பகுதிகளுக்கும் மின் இணைப்பு தற்பொது வழங்க இயலாக பகுதிகளுக்கும் சோலார் பம்ப்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலமாக, 80 மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன. இதில் விவசாயிகளின் பங்களிப்பு, 20 சதவீத தொகையாகும். நுண்ணீர் பாசன வசதி அமைத்துள்ள விவசாயிகளுக்கும், நுண்ணீர் பாசன வசதி அமைக்கவிருக்கும் விவசாயிகளுக்கும், முன்னுரிமை அளித்து இத்திட்டம் செயல்படுத்தபடும். வேளாண் துறை மற்றும் தோட்டக்கலை துறை நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து கொடுக்கும் பணி மேற்கொள்வதால் இத்திட்டத்தின் மூலமாக சோலார் பம்புடன் நுண்ணீர் பாசன வசதி அமைத்து கொள்ள விரும்பும் விவசாயிகள் கீழ்க்கண்ட அலுவலகத்தினை தொடர்பு கொண்டு அதற்கான விண்ணப்பித்தினை பெற்று பூர்த்தி செய்து அலுவலகத்தில் ஒப்படைத்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**22.08.2013**

**டெல்டா விவசாயிகளுக்கு பாகுபாடின்றி பயிர்க்கடன் பாஜ வலியுறுத்தல்**

கும்பகோணம்: காவிரி டெல்டா விவசாயிகளுக்கு பாகுபாடின்றி பயிர்க்கடன் வழங்க வேண்டும் என பாஜக கோரிக்கை விடுத்துள்ளது.
பாரதிய ஜனதா கட்சியின் மூத்தோர் பிரிவின் 3 மாவட்ட செயற்குழு கூட்டம் கும்பகோணம் மகாமகம் குளம் தென்கரையில் நடைபெற்றது.
தஞ்சை மாவட்ட தலைவர் கல்யாணசுந்தரம் தலைமை வகித்தார். கோட்ட பொறுப்பாளர் ஆதிகேசவன் முன்னிலை வகித்தார். மாநில தலைவர்கள் வடிவேலு, சங்கர், முன்னாள் மாநில செயலாளர் ராமலிங்கம், மாநில துணைத்தலைவர் ராஜேந்திரன், திருவாரூர் மாவட்ட முன்னாள் தலைவர் சேதுராமன், தஞ்சை மாவட்ட தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோர் பேசினர்.

முன்னதாக மாவட்ட செயலாளர் ஜெயபால் வரவேற்றார். செயற்குழு உறுப்பினர் ராஜப்பா நன்றி கூறினார். காவிரி டெல்டா விவசாயிகளுக்கு பாகுபாடின்றி கூட்டுறவு வங்கிகள் மூலம் பயிர்க்கடன் வழங்க வேண்டும். அணைக்கரை கொள்ளிடம் ஆற்றுப்பாலத்தில் பஸ்களை தவிர மற்ற கனரக வாகனங்கள் எதையும் அனுமதிக்கக்கூடாது. புதிய பாலம் உடனே கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மண் மாதிரி சேகரிப்பு முகாம்**

ஆலங்குடி: புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள வேங்கடக்குளத்தில் தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை மற்றும் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவர்கள் சார்பில் சிறப்பு மண்மாதிரி சேகரிப்பு முகாம் நடந்தது. மண் மாதிரி அவசியத்தை திருவரங்குளம் வேளாண்மை உதவி இயக்குநர் சிவக்குமார் விளக்கினார். மண் ணில் உள்ள சத்துக்களின் அளவை அறிந்து சாகுபடி செய்யும் பயிருக்கு ஏற்ற உரங்களை இடுவதற்கு மண் பரிசோதனை அவசியம் என்றும், இதனால் பயிர் செழித்து வளர்ந்து மகசூல் அதிகரிப்பதோடு மண் வளமும் பாதுகாக்கப்படுகிறது என்றார்.

முகாமில் அட்மா விவசாயிகள் ஆலோசனைக்குழு உறுப்பினர் வீராச்சாமி மற்றும் அப்பகுதி விவசாயிகள், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூ ரியை சேர்ந்த வேளாண் பட்டதாரி மாணவர்கள் மண்மாதிரி சேகரித்தனர். இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் பிரதீப் செந்தில் செய்திருந்தார்.

**விவசாயிகளுக்கு நெல் நாற்று நடும் கருவி**

கரூர்: கரூரில் நடந்த மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் ரூ.7.44 லட்சம் மதிப்பில் விவசாயிகளுக்கு நெல் நாற்று நடும் கருவி வழங்கப்பட்டது.
கரூர் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடைபெற்றது. பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பின்னர் உரிய நடவடிக்கை எடுக்க துறை அதிகாரிகளுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.
கூட்டத்தில் கரூர் தாலுகாவை சேர்ந்த 10 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 33 பேருக்கு தலா ரூ.3,500 மதிப்பிலான இலவச தையல் இயந்திரம், 10 பேருக்கு தலா ரூ.1200 மதிப்பிலான சலவை பெட்டிகள், ரூ.6.16 லட்சம் மதிப்பில் 4 விவசாயிகளுக்கு பவர்டில்லர் கருவிகள், ரூ1.40 லட்சம் மதிப்பில் 4 பேருக்கு பவர்வீடர் கருவிகள், ரூ.7.44 லட்சம் மதிப்பில் 4 விவசாயிகளுக்கு நெல் நாற்று நடும் கருவிகளை கலெக்டர் ஜெயந்தி வழங்கினார்.
மாவட்ட மகளிர் திட்டத்தின் மூலம் கிராம பகுதிகளில் தொற்றுநோய்கள்

தொடர்பான தடுப்பு மற்றும் சிகிச்சை பெறுவதை கண்காணிப்பதற்காக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் 3 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கினார். கடலூர் தாலுகா தென்னிலை கிராமம் மஞ்சபுலிப்பட்டியில் இயங்கி வரும் அரசு பள்ளிக்கு ராஜேஸ்வரி என்பவரது நிலத்தை தமிழக அரசு கல்வித்துறைக்கு இலவசமாக பத்திர கிரயம் செய்து, அதற்குரிய ஆணையை கலெக்டரிடம் வழங்கினர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**22.08.2013**

## விளைநிலங்களில் மழைநீர் தேங்கி நின்றதால் கம்மாபுரம் பகுதியில் நெற்பயிர்கள் நாசம்



கம்மாபுரம்.

விளை நிலங்களில் மழைநீர் தேங்கி நின்றதால் கம்மாபுரம் பகுதியில் நெற்பயிர்கள் அனைத்து நாசமாகின. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

500 எக்டர்

கம்மாபுரம் அருகில் உள்ள தேவங்குடி கிராமத்தில் கடந்த ஜூன் மாதம் எ.எஸ்.டி. 16, எடிடி போன்ற நெல் ரகங்களை பயன்படுத்தி விவசாயிகள் சுமார் 500 எக்டருக்கு மேல் குறுவை சாகுபடியில் ஈடுபட்டனர். நல்ல முறையில் விவசாயம் செழித்து நெற் பயிர்கள் அனைத்தும் விளைந்து அறுவடைக்கு தயாரான நிலையில் இருந்து வந்தன.

இந்த நேரத்தில் அண்மையில் சிலநாட்களாக பெய்துவந்த வந்த மழையால் நெற் பயிர்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளன. சில இடங்களில் நெற்கதிர்கள் நிலத்திலேயே சாய்ந்தன.

<u>வாய்க்கால் தூர்ந்து</u>

தேவங்குடி கிராமத்துக்கு மேல் பகுதியில் உள்ள தொழுர், கீழப்பாளையூர் கிராமங்களில் இருந்து வரக்கூடிய மழைநீர் தேவங்குடி கிராமத்தின் வழியாக சென்று மணிமுக்தாற்றில் கலக்கும். இதற்காக அப்பகுதி விவசாய விளைநிலங்கள் இருக்கும் பகுதியில் பனைமரத்து வாய்க்கால், காடுவெட்டி வாய்க்கால், தலகாணி வாய்க்கால், பெரிய வாய்க்கால் போன்ற பல்வேறு வாய்க்கால்கள் இருந்தன. இந்த வாய்க்கால்களை பொதுபணித்துறை சரியான முறையில் பராமரிக்காததால் நாளடைவில் தூர்ந்து இன்று வாய்க்கால்கள் இருந்த இடமே தெரியாமல் போய்விட்டன.

இதனால் தற்போது பெய்து வரும் மழையால் பெருகி ஓடும் நீர் வடிவதற்கு வடிகால் இல்லாததால் விளைநிலங்களில் தேங்கி நிற்கும் நிலை உள்ளது. இதனால் தேவங்குடி கிராமத்தில் பல ஏக்கர் விவசாய நிலங்களில் நெற்கதிர்களில் உள்ள மணிகள் முளைத்து நாசமாகின. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**விருத்தாசலம் பகுதியில் ஆட்கள் பற்றாக்குறை நெற்கதிர்களை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பரிதவிப்பு**



விருத்தாசலம்,

விருத்தாசலம் பகுதியில் கூலி ஆட்கள் பற்றாக்குறையால் நெற்கதிர்களை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

<u>கவலை</u>

விருத்தாசலம் மற்றும் அதனை சுற்றியுள்ள கம்மாபுரம், சிறுப்பாக்கம், கோ.மாவிடந்தல் உள்பட 30–க்கும் மேற்பட்ட கிராம பகுதிகளில் விவசாயிகள் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் குறுவை சாகுபடியினை மேற்கொண்டனர். அவைகள் நன்கு விளைந்து அறுவடைக்கு தயராக இருந்த நிலையில் விருத்தாசலத்தில் பெய்து வந்த பலத்த மழையால் தாழ்வான இடங்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் மழை நீர் மூழ்கின. இதனால் நெற்கதிர்கள் முளைத்து வீணாகி வந்தது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மழை நின்று 5 நாட்கள் ஆன பின்பும் மழையால் சேதமடைந்த நெற்கதிர்களை தவிர்த்துவிட்டு எஞ்சியுள்ள நெற்கதிர்களை அறுவடை செய்து அதனை காப்பாற்ற முடியால் விவசாயிகள் தற்போது பரிதவித்து வருகின்றனர்.

இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது.

<u>தண்ணீர் தேக்கம்</u>

கடந்த 10 நாட்களாக பெய்த கன மழையால் அறுவடைக்கு தயராக இருந்த நெற்பயிர்கள் பலத்த சேதமடைந்தன. மழை நின்ற பின் சேதம் அடையாத நெற்கதிர்களை மட்டும் அறுவடை செய்து, அதன் மூலம் ஓரளவுக்கு நஷ்டத்தில் இருந்து தப்பிக்கலாம் என நினைத்து இருந்தேன். ஆனால் அறுவடை பணியினை மேற்கொள்ள கூலி ஆட்கள் கிடைக்கவில்லை. கிராம புறங்களில் உள்ள விவசாய கூலி ஆட்கள் தற்போது 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் வேலை செய்யவே அதிக ஆர்வம் காட்டி வருவதால் அவர்கள் விவசாய வேலைக்கு வர தயங்குகின்றனர். இதன் காரணமாக என்னை போன்ற பல விவசாயிகள் அறுவடை செய்ய முடியால் உள்ளனர். வயல்வெளிகளில் மழை நீர் இன்னும் தேங்கி நிற்பதால் இயந்திரம் உதவியுடன் நெற்கதிர்களை அறுவடை செய்வதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் வேறு வழியின்றி விவசாயிகள் நெல் அறுவடை இயந்திரத்தை கொண்டு அறுவடை பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வாறு செய்வதன் மூலம் இயந்திர வண்டியின் டயர்கள் வயல்வெளிகளில் உள்ள சேற்றில் அடிக்கடி சிக்குவதால் விவசாய நிலங்களும் சேதமடைகின்றன. நன்கு விளைந்த நெற்கதிர்களை அறுவடை செய்ய முடியால் இருப்பதால் அவைகள் உதிர்ந்து கீழே விழுந்து வீணாகும் சூழ்நிலையில் உள்ளன. இதன் காரணமாக எங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்படவுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.